ஸ்ரீ ரஸ்து.

ஸ்ரீ ரகுநந்தன பரப்ரஹ்மணே நமஃ

# ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்ரம்.

மயிலை கொ. பட்டாபிராம முதலியார்
எழுதிய
ப்ரதிபத தாத்பர்யம்.

சென்னை
ஸ்ரீ வைஷ்ணவ முத்ராலயத்தில்
பதிப்பிக்கப் பெற்றது

1929

காபிரைட் ரிஜர்வ்ட்]

[விலை அணா 3

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# ஸ்ரீராமநாம வைபவம்

நாடியபொருள் கைகூடும்
ஞானமும் புகழுமுண்டாம்
வீடியல் வழியதாக்கும்
வேரியங்கமலை நோக்கும்
நீடியவரக்கர்சேனை
நீறுபட்டழியவாகை
சூடிய சிலையிராமன்
தோள் வலிகூறுவோர்க்கே.

நன்மையுஞ் செல்வமு நாளுநல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே
சென்மமு மரணமுமின்றித் தீருமே
இம்மையே ராமவென்றி ரண்டெழுத்தினல்.

ஸ்ரீ



# விஞ்ஞாபனம்.

ஸ்ரீய: பதியான ஸர்வேச்வரனுடைய ஆஞ்யா ரூபமான வேதத்தினுட்பொருளை நன்றாக அறிவதற்கு இதிஹாஸ புராணங்கள், ஸாதனமாக யிருப்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. இதிஹாஸச்ரேஷ்டமாய் "வேத வேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே வேதப்ரா சேதஸா தாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மனா" (ஸர்வேச்வரன் தசரதருக்கு குமாரராக அவதரித்த போது அவனை ப்ரதிபாதிக்கிற வேதமே ஸ்ரீ ராமாயணமாக ஆயிற்று.) என்றபடி விசேஷ மகிமையை யுடைய ராமாயணத்தை (ஐச்வர்யார்த்தியோடு, மோக்ஷார்த்தியோடு வாசியற) ஸகலரும் ஸதா ஸேவிப்பது வழக்கம். இக்கிரந்தத்தில் யுத்தகாண்டத்தில் 107-வது ஸர்க்கத்தில் காணப்படும் "ஆதித்ய ஹ்ருதயம்" என்கிற ஸ்தோத்ரம் விசேஷ மஹிமையுடையது. இந்த ஸ்தோத்திரத்தால் ஸூர்ய மண்டல மத்ய வர்த்தியான ஸர்வேச்வரனை த்யானித்தால் எல்லாவித பலன்களும் கைக்கூடும். இது யுத்தத்தில் ஜயத்தை உண்டாக்கக் கூடியது, அனாதியானது, மிகவும் பவித்ரமானது, ஸகலமான சத்ருக்களையும் ஜெயிக்கக் கூடியது, எப்பொழுதும் ஜயத்தையே விளைவிக்கக் கூடியது, அழிவில்லா

ரது, அழிவற்ற பலத்தை கொடுக்கக் கூடியது, யக்ஞங்களுக் கெல்லாம் மங்களமானது, எல்லாவித பாவங்களையும், எல்லாவித வ்யாதிகளையும் போக்கடிப்பது, ஆயுஸ்ஸை வ்ருத்தி செய்வது. ஸ்தோத்ரங்களுக் கெல்லாம் மேற்பட்டது. இதின் மஹிமையை அறிந்த அகஸ்த்ய மஹாமுனி, ராம ராவண யுத்தத்தை பார்ப்ப தற்காக தேவர்களுடன் வந்தபோது, யுத்தத்தில் இளைப்புற்றி ருந்து மறுபடியும் போருக்கு வந்து தன் எதிரில் நிற்கும் ராவ ணனைப் பார்த்து இனிச் செய்ய வேண்டியது யாதென்று ஆலோ சித்துக் கொண்டிருக்கும் ராமபிரானைப் பார்த்து, இதின் மஹி மையை விசேஷமாக எடுத்துரைத்து விட்டு "ராமா! நீர் இந்த ஆதித்ய ஹ்ருதயத்தை ஜபியும். இந்த க்ஷணத்திலேயே ராவ ணனை நிரஸித்து விடலாம்" என்று சொல்லிவிட்டு தன் ஸ்தா னம் போய்ச் சேர்ந்தார். அகஸ்த்ய பகவான் உரைத்த வண்ணமே சக்ரவர்த்தி திருமகன் சுத்தியாக யிருந்துக்கொண்டு ஆசமனாதிக ளைச் செய்து ஆதித்யஹ்ருதயத்தை பக்தியோடு ஜபித்துவிட்டு ஸந்தோஷமாக யுத்தத்துக்குச் சென்றார். அப்பொழுது ஸூர்ய மண்டல மத்ய வர்த்தியான புருஷோத்தமன் ராமனுக்குத் தோன்றி "ராக்ஷஸர்களுக் கரசனான ராவணன் நாசத்தை அடை வான். நீ த்வரையுடன் இரு" என்று கூறினார்.

இந்த "ஆதித்ய ஹ்ருதயம்" "ப்ராசீன ஸ்ரீ ராமாயண க்ரந் தங்களில் காணப்படுகிறதில்லை." யென்றும், புதிதாக சேர்த்து அச்சிடப்பட் டிருக்கிற தென்றும் சிலர் அபிப்பிராயப் படுகிறார் கள். அதற்கு காரணம் கீழ்வருமாறு உரைக்கிறார்கள். "ஸ்ரீ ராமா யணத்துக்கு வ்யாக்யானம் செய்தவர்களில் ஒருவரான கோவிந் தராஜரே அது விஷயமாய் தம்முடைய வ்யாக்யானத்தில் ப்ரஸ் தாபம் செய்கிறார்.

"ஸ்ரீ ராமாயணத்துக்கு ப்ராசீன வ்யாக்யாதாக்களான 'உடாரி' 'கதகர்' முதலானோருடைய வ்யாக்யானங்களை அடி யொற்றியே கோவிந்தராஜர் மஹேச்வர தீர்த்தர் முதலான" நவீன வ்யாக்யாதாக்கள் தங்கள் வ்யாக்யானங்களை எழுதலாயி னர். கோவிந்தராஜர் ஆதித்ய ஹ்ருதயத்திற்கு வ்யாக்யானம்

செய்துவிட்டு கடைசியில் "அயஞ்ச ஸர்க: கேஷுசித் கோசேஷு ந த்ருச்யதே, உடாரிணு கஞ்யாக்யா தஸ்ச ஆரம் பாத் ப்ரப்ருதி ப்ரபந்த ப்ரதிபாதித நாராயண பரத்வ விருத்தஞ் சாத்ர ப்ரதிபாதி ஸூர்ய பரத்வம் அஸ்மிம்சகாண்டே த்ரிம் சதுத்தர சத ஸர்காஸ் நேதகணிதா பவேயு:'' என்று கூறியி ருக்கிறார்.

"இதனுல் தெரிகிற தென்னவென்றால் ப்ராசின வ்யா க்யாதாவான உடாரி இந்த ஸர்க்கத்துக்கு (ஆதித்ய ஹ்ருத யத்துக்கு) வ்யாக்யானம் செய்யாததாலும், அவரே யுத்த காண் டத்தில் 130-ஸர்க்கமே யுள்ளதென்று கூறி யிருக்கையாலும் (இந்த ஸர்க்கத்தை சேர்த்தால் 131-ஸர்க்கமாகும்) முதலி லிருந்து கடைசிவரையில் ஸ்ரீ ராமாயணம் நாராயண பரத்வத் தையே ப்ரதி பாதித்துக் கொண்டுவந்து இவ்விடத்தில் ஸூர்ய னுக்கு பரத்வம் சொல்லுவது தகாததாகையாலும், இது புதிதாய் சேர்க்கப்பட்டதென்பதற்கு யாதொரு குறையு மில்லையென்றும் தோன்றுகிறது.

"மேலும், 'ஸஹிதேவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த் திபி:, அர்த்திதோ மாநுஷேலோகே ஜஞ்யே விஷ்ணுஸ் ஸநா தன:' என்றபடி அவதரித்த ஸாக்ஷாத் விஷ்ணுவான ராமன் யுத்தத்தில் ராவணனை கொல்லமுடியாமல் சிந்தித்ததாயும் அகஸ் திய மஹாமுனி அவ்விடம் வந்து ஆதித்ய ஹ்ருதயத்தை ராம னுக்கு உபதேசித்ததாயும் சொல்லுவது ராமனுடைய ஸர்வ சக் தித்வாதிகளுக்கு குறைவு ஏற்படும்."

இத்தோத்திரம் மிகவும் ப்ராசீனமானதாகையாலும், சிறந்த மஹிமையை உடையதாகையாலும், வெகு நாளாய் இஷ் டஸித்தியை நிறைவேற்றுவதாலும், அநேக பெரியோர்களால் அநுஸந்திக்கப்படுவதாலுந்தான் கோவிந்தராஜரும் இதற்கு வ்யா க்யானம் செய்ய இணங்கினரென்று தோன்றுகிறது. கோவிந்த ராஜரும், தனிஸ்லோகி என்கிற ஸ்ரீராமாயண வ்யாக்யானத்தை செய்த பெரியவாச்சான் பிள்ளையும், ஆதித்ய ஹ்ருதயத்துக்கு நாராயணபரமாகவே அர்த்தம் செய்தனர். ஆயினும், இத்தோத்

திரம் (ஆதித்ய ஹ்ருதயம்) யாரோ ஒரு மஹாத்மாவி
யப்பட்டதென்பதற்கு யாதொரு குறையுமில்லை.
இதன் மஹிமை மிகவும் புகழத்தக்கதே.

"ஆதித்ய ஹ்ருதயம்" என்கிற பெயர் இக்கிர
வந்ததற்கு பல காரணங்களிருப்பினும் சிலவற்றை இ
வோம்:—

(1) ஸூர்யனை ப்ரகாசிப்பிக்கிறது.

(2) ஆதித்ய (சூர்ய) மண்டலத்தை அடைந்த பு

(3) சூர்ய மண்டலத்தின் ஹ்ருதயத்தை அடை
(நாராயணனைப்) பற்றி கூறுகிற க்ரந்தம்.

இத்தோத்திரத்தை ச்ரத்தா பக்தியுடன் படிப்ப
ளுக்கு இஷ்ட பூர்த்தி யுண்டாகுமாகையால், இதன் பொ
எல்லோரும் அறிந்து உஜ்ஜீவிக்கும் பொருட்டு தமிழில் அ
எழுதப்பட்டது. இதில் தோஷங்களேதேனும் இருப்
மஹான்கள் அவற்றை பொருத்தருள வேணுமாய் ப்ரா
கிறேன்.

இங்ஙனம்,

ஸ்ரீ வைஷ்ணவ தாஸன்

மயிலை. பட்டாபிராமன்.

ஸ்ரீ ரஸ்து.

ஸ்ரீஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன ஹனுமத்ஸமேத

ஸ்ரீராமசந்த்ர பரப்ரஹ்மணே நம:

# ஆதித்ய ஹ்ருதய

## ஸ்தோத்திரம்.

1 ததோ யுத்தபரிஶ்ராந்தம்
ஸமரே சிந்தயா ஸ்திதம்
ராவணம் சாக்ரதோ த்ருஷ்ட்வா
யுத்தாய ஸமுபஸ்திதம்.

2 தைவதைஶ்ச ஸமாகம்ய
த்ரஷ்டு மப்யாகதோ ரணம்
உபாகம்யாப்ரவீத் ராம
அகஸ்த்யோ பகவான் ரிஷி:.

பதவுரை.

| | |
|---|---|
| தத: | பிறகு, |
| ரணம் | யுத்தத்தை, |
| த்ரஷ்டும் | பார்ப்பதற்காக |
| தைவதைஸ்ச | தேவர்களுடன், |
| ஸமாகம்ய | கூடி |
| அப்யாகத: | வந்த, |
| பகவான் | அதிக மஹிமையையுடைய |
| ரிஷி: | ஞானவானான, |
| அகஸ்த்ய: | அகஸ்த்யர், |
| யுத்த பரிஸ்ராந்தம் | போரில் இளைப்புற்றவரும், |
| யுத்தாய | யுத்தத்திற்காக |
| ஸமுபஸ்திதம் | வந்த, |
| ராவணஞ்ச | ராவணனையும், |

| | |
|---|---|
| அக்ரத: | எதிரில், |
| த்ருஷ்ட்வா | பார்த்து, |
| ஸமரே | யுத்தத்தில், |
| சிந்தயா | ஆலோசனையுன் |
| ஸ்திதம் | இருப்பவரான, |
| ராமம் | ஸ்ரீ ராமபிரானை, |
| உபாகம்ய | கிட்டி, |
| அப்ரவீத் | சொன்னர். |

(தாத்பர்யம):—அனந்தரம், யுத்தத்தைப் பார்ப்பதற்காக தேவர்களுடன் வந்திருந்த விசேஷமான மாஹாத்மியத்தை யுடைய த்ரிகாலஞானியான அகஸ்த்ய மஹாமுனி, யுத்தத்தில் இளைப்புற்றிருந்து மறுபடியும் போருக்கு வந்து தன் எதிரில் நிற்க்கும் ராவணனைப் பார்த்து, இனிச் செய்யவேண்டியது யாதென்று ஆலோசித்துக்கொண்டிருக்கும் சக்ரவர்த்தி திருமகனை கிட்டி இவ்வாறு சொல்லலாயினர்.

(அவதாரிகை):—இம் மூன்று ச்லோகங்களால் இந்த ஸ்தோத்திரத்தின் ஒப்புயர்வற்ற பெருமையை வெளியிடுகிறர்.

3 ராம ராம மஹாபாஹோ ஶ்ருணு குஹ்யம் ஸநாதனம்
ஏன ஸர்வாந் அரீன் வத்ஸ ஸமரே விஜயிஷ்யஸி.

4 ஆதித்ய ஹ்ருதயம் புண்யம் ஸர்வ ஶத்ரு விநாஶனம்;
ஜயாவஹம் ஜபம் நித்யம் அக்ஷய்யம் பரமம் சிவம்,

5 ஸர்வமங்கள மங்கள்யம் ஸர்வ பாப ப்ரணாஶனம்
சிந்தாஶோக ப்ரஶமனம் ஆயுர்வர்த்தன முத்தமம்.

## பதவுரை.

| | |
|---|---|
| ராம ராமா | ஹே ராமா |
| மஹாபாஹோ | பெரிய புஜமுடையவனே, |
| வத்ஸ | ஏ குழந்தாய், |
| யேன | எதனால், |
| ஸமரே | யுத்தத்தில், |
| அரீன் | சத்ருக்களை, |
| ஸர்வான் | எல்லாறையும், |
| விஜயிஷ்யஸி | ஜெயிப்பாயோ (அப்படிபட்ட), |
| குஹ்யம் | ரஹஸ்யத்தை, |
| ஸநாதனம் | அனாதியும், |
| புண்யம் | பரிசுத்தமும், |
| ஸர்வசத்ருவிநாசனம் | எல்லா சத்ருக்களையும், நாசம் செய் [வதும் |
| ஜயாவஹம் | ஜயமளிப்பதும் |
| நித்யம் | அழிவில்லாததும், |
| அக்ஷய்யம் | அழிவற்ற பலத்தை யுடையதும், |
| பரமம் சிவம் | பரமமங்களமானதும் |
| ஸர்வமங்கள மங்கள்யம் | எல்லா மங்களங்களுக்கும் மங்கள [மானதும், |
| ஸர்வபாப ப்ரணாசனம் | எல்லாவித பாவங்களை யொழிப் [பதும், |
| சிந்தாசோகப்ரசமனம் | மனதின் துயரத்தையும், தேஹ [பீடையையும் யொழிப்பதும், |
| ஆயுர்வர்த்தனம் | ஆயுளை வ்ருத்தி செய்வதும், |
| உத்தமம் | சிறந்ததும், (ஆன) |
| ஆதித்ய ஹ்ருதயம் | சூர்யமண்டலத்துத் அந்தர்யாமி யாக இருந்துள்ள நாராயணனை ப்ரதிபாதிக்கிற ஆதித்ய ஹ்ருதய மென்கிற |
| ஜபம் | தோத்திரத்தை, |
| ஸ்ருணு, | கேள். |

(தாத்பர்யம்):—ராமா! ராமா!! [ராமன் விசாரப்பட்டுகொண்டிருப்பதாலும், மிகவும் ஆதரம் இருப்பதாலும், காரியத்திலுள்ள அவஸரத்தாலும், இரண்டு தரம் ராமாவென்று ஸம்போதிக்கப்பட்டது] எல்லா விதத்தாலும் பெருமையையுடைய பாஹுக்களை உடையவனே! நீ எந்த ஸ்தோத்திரத்தால் எல்லா சத்ருக்களையும் யுத்தத்தில் ஜயிப்பாயோ அப்படிப்பட்ட பரம ரஹஸ்யமானதும், அநாதியானதும், பவித்ரமானதும், எல்லா சத்ருக்களையும் நாசம் செய்யக்கூடியதும், எப்பொழுதும் ஜயத்தை விளைவிக்கக் கூடியதும், அழிவில்லாததும், அழிவில்லாத பலத்தைக் கொடுக்கக் கூடியதும், மங்களங்களுக்கெல்லாம் மங்களமானதும், எல்லாப் பாவங்களையும் போக்கடிப்பதும், எல்லாவித வ்யாதிகளையும் தீர்ப்பதும், ஆயுஸ்ஸை வ்ருத்திசெய்வதும், ஸ்தோத்திரங்களுக்கெல்லாம் மேற்பட்ட தாயுமுள்ள, ஸர்வேச்வரனை ப்ரதிபாதிக்கிற ஆதித்ய ஹ்ருதயமென்கிற, ஸ்தோத்திரத்தை உனக்கு உபதேசிக்கிறேன், கேள். (3—5)

(அவதாரிகை):—இந்த ஸ்தோத்ரத்திற்கு ப்ரதிபாத்யனை ஸர்வேச்வரனுடைய பெருமையை கூறுகிறார்.

6 ரஶ்மிமந்தம் ஸமுத்யந்தம்
தேவாஸுர நமஸ்க்ருதம்
பூஜயஸ்வவிவஸ்வந்தம்
பாஸ்கரம் புவனேஶ்வரம்

## பதவுரை.

ரஸ்மிமந்தம் — ஸ்ரீ ப்ரசஸ்தமான கிரணங்களுடை[யவனும்;
ஸமுத்யந்தம் — நன்றாக உதயமாய்க் கொண்டிருப்[பவனும்,
தேவாஸுரநமஸ்கிருதம் — தேவர்களாலும், அசுரர்களாலும், [நமஸ்கரிக்கப் பட்டவனும்,
விவஸ்வந்தம் — தன்னொளியால் மற்ற தேஜஸ்ஸு[க்களை மழுங்கப் பண்ணுமாறு,
பாஸ்கரம் — ஒளிவிடுமவனும்,
புவனேச்வரம் — லோகநாதனும் (ஆன) ஸர்வேச்[வரனை,
பூஜயஸ்வ — பூஜி. இத்தோத்திரத்தால் ஆராதி[யென்பதாம்.

(தாத்பர்யம்):--ஸ்வர்ணச்சாயையா யிருப்பதால் ப்ரசஸ்தமான கிரணங்களை யுடையவனும் அந்தரங்க பக்தர்களால் ஸதாத்யானிக்கப்படுமவனும் உதயத்தை அடைபவனும் ["உதயமாய்க்கொண்டு" என்று சொல்லுவதால் அப்பொழுதுதான் உதயமாய்க் கொண்டிருப்பதாக பொருள் கொள்ளக் கூடாது. ஏனென்றால் அகஸ்தியர்வந்தது மத்தியானத்தில்,] தேவர்களாலும், அரக்கர்களாலும், பூஜிக்கப் படுமவனும், தன்தேஜஸ்ஸால் இதர தேஜஸ்ஸுகளை மழுங்கப்பண்ணுமவனும், சந்த்ர சூர்யர்களுக்கும் தேஜஸ்ஸை கொடுக்கக் கூடியவனுமான ஸர்வலோக சரண்யனை ஸர்வேச்வரனை இந்த ஸ்தோத்ரத்தால் ஆராதிக்கவும். (6)

(அவதாரிகை :—இந்த புருஷன் மற்ற தேவதைகளைக் காட்டிலும் மேன்மை யுடையவனென்பதை உபபாதிக்கிறார்.

7 ஸர்வதேவாத்மகோ ஹ்யேஷ
தேஜஸ்வீ ரஶ்மிபாவநஃ
ஏஷ தேவாஸுரகணான்
லோகாந் பாதி கபஸ்திபிஃ

பதவுரை.

| | |
|---|---|
| ஏஷ: | இந்த சூர்ய மண்டல வர்த்தியான [புருஷன் |
| ஸர்வதேவாத்மகா: | எல்லா தேவர்களுக்கும் ஆத்மா [போன்றவர் |
| தேஜஸ்வீ | மிகுந்த ஒளியை யுடையவன், |
| ரஸ்மிபாவன: | கிரணங்களால் (உலகத்தை) உண்டாக்குமவன்; அந்தரங்க பக்தர்களை முக்தர்களாக்குமவன், |
| ஏஷ: | இவன் |
| தேவாஸுரகணான் | தேவாசுரர்களின் கூட்டத் [தையும், |
| லோகான் | உலகங்களையும், |
| கபஸ்திப: | கிரணங்களால், |
| பாதி. | ரக்ஷிக்கிறான். |

தாத்பர்யம்:—சூர்யமண்டல மத்ய வர்த்தியான இப் புருஷன் ஸமஸ்த தேவர்களையும் சரீர மாகக் கொண்டு தான் அவர்களுக்கு ஆத்மாவாக விருப்பவன் மிகுந்த தேஜஸ்ஸை உடையவன். தன் கிரணத்தால் ஸகல லோகங்களுக்கும் உத்பத்தி, ஸ்திதி ஸம்ஹாரங்களை செய்பவன் (பக்தர்களுக்கு மோக்ஷத்தை கொடுப்பவன்) இவன்தான், தன் கிரணங்களால், மழை முதலானவைகளை யுண்டாக்கித் தேவர்கள் ராக்ஷஸர்கள், முதலான ஸமஸ்த ஜகத்தையும் ரக்ஷிக்கிறான்.

அவதாரிகை—கீழ் ஸ்லோகத்தில் கூறிய ஸர்வ தேவாத்மகத்வத்தை (அதாவது எல்லா தேவர்களுக்கும் அந்தராத்மாவாக இருப்பதை)மேல் இரண்டு ஸ்லோகங்களில் விவரிக்கிறார்.

8 ஏஷ ப்ரஹ்மாச விஷ்ணுஸ்ச
சிவஸ்கந்தஃ ப்ரஜாபதிஃ
மஹேந்த்ரோ தனதஃகாலோ
யமஸ்ஸோமோ ஹ்ய பாம்பதிஃ

9. பிதரோ வஸவ ஸ்ஸாத்யாஃ
அஸ்விநௌ மருதோமனுஃ.
வாயுர்வஹ்நிஃ ப்ரஜாப்ராண
ருதுகர்த்தா ப்ரபாகரஃ.

பதவுரை.

| | |
|---|---|
| ஏஷஃ | இவன் |
| பிரம்மாச | பிரமனும், |
| விஷ்ணுச | விஷ்ணுவும், |
| ஸிவஃ | சிவனும், |
| ஸ்கந்தஃ | குமாரஸ்வாமியும், |
| ப்ராஜபதிஃ | நவப்ரஜா பதிகளும், |
| மஹேந்திர | தேவேந்திரனும், |
| தனதஃ | குபேரனும், |
| காலஃ | மிருத்யுவும், |
| யமஃ | எமனும், |
| ஸோமஃ | சந்திரனும், |
| அபாம்பதிஃ | வருணனும் (ஆகிறான்). |

| | |
|---|---|
| பிதர: | பித்ருதேவதைகள் |
| வஸவ: | அஷ்ட வசுக்கள் |
| ஸாத்தியா: | ஸாத்யர்கள் |
| அஸ்வினௌ | அஸ்வினீ தேவர்கள் |
| மருத: | மருத்கணங்கள் |
| மனு: | மனு |
| வாயு: | பூலோகத்திலிருக்கும் வாயு |
| வஹ்நி: | நெருப்பு |
| ப்ரஜாப்ராண: | பிராணிகளின் உயிர் |
| ருதுகர்த்தா | ருதுக்களை யுண்டாக்கும் |
| ப்ரபாகர: | சூரியனும் (இவனே). |

தாத்பர்யம்—இவன்தான், ஸமஸ்த தேவர்களை யும் சரீரமாகவுடையவன். ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன், குமாரஸ்வாமி, நவப்ராஜாபதிகள், தேவேந்திரன், குபேரன், ம்ருத்யு, யமன் சந்திரன் வருணன், எல்லாரும் இவனேதான். பித்ரு தேவதைகளும், அஷ்ட வஸுக்களும், ஸாத்யர்களும், அச்வினி தேவதைக ளும், 49-மருத்துக்களும், மனுவும், வாயுவும், அக்னி யும், ப்ராணனும், வஸந்தாதி ருதுக்களுக்கு காரண மான ஸூர்யனும் எல்லாம் இவனே. 8-9

அவதாரிகை:— ஸூர்ய மண்டல மத்ய வர்த்தி யான ஸர்வேஸ்வரனுடைய ஸ்வரூபத்தை விளக்கு கிறார் இதில்.

10. ஆதித்ய ஸ்ஸவிதா ஸூர்ய:
கக: பூஷா கபஸ்திமான்:
ஸுவர்ண ஸத்ருஸோ பாநு:
ஹிரண்ய ரேதா திவாகர:.

## பதவுரை.

### ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்ர ப்ராரம்ப:

| | |
|---|---|
| ஆதித்ய: | (நீ) அதிதியின் மகன் |
| ஸவிதா | உலகங்களை உண்டாக்குகிறவன் |
| ஸூர்ய: | ஜனங்களை அவரவர்களின் கர்மங்களைச் செய்விப்பிக்கிறவன் |
| கக: | ஆகாயத்தில் ஸஞ்சரிப்பவன் |
| பூஷா | மழைபெய்வித்து உலகைபோஷிப்பவன் |
| கபஸ்திமான் | சிறந்த கிரணங்களை யுடையவன் |
| ஸுவர்ண ஸத்ருச: | பொன்னுக்கு நிகரானவன் |
| பானு: | எங்கும் ப்ரகாசிப்பவன் |
| ஹிரண்யரேதா: | ஸ்வர்ணமயமான ப்ரஹ்மாண்டத்தை யுண்டாக்கினவன் |
| திவாகர: | பகலையுண்டாக்குகிறவன் |

தாத்பர்யம்—அதிதியின் புத்திரனும், பூமியிலுள்ள ஸகல ரஸங்களையும் க்ரஹிப்பவனும், ஜீவரூபத்தால் ஸகல விஷயங்களையும் அநுபவிப்பவனும், உலகத்தை உண்டாக்குமவனும், ஜனங்கள் தாங்கள் தங்கள் நித்யநைமித்திக கர்மங்களில் நின்றும் தவராமலிருக்கும்படி செய்பவனும், ஆகாயத்தில் திரிகின்றவனும், ஜகத்தை போஷிப்பவனும், சிறந்த கிரணங்களையுடையவனும், ஸர்வ வ்யாபியாய் லக்ஷ்மியையுடையவனும், தங்கத்தைப் போன்றவனும், எங்கும்ப்ரகாசிப்பவனும், ஸ்வர்ணமயமான ப்ரம்மாண்டத்தை ஸ்ருஷ்டிப்பவனும், பகலையுண்டாக்குமவனும், அஞ்ஞானத்தை கொடுப்பவனும், இவையெல்லாம் நீயே. 10

அவதாரிகை:—இந்தஸ்லோகத்தில் ஆதித்யமண்டலாந்தர்வர்த்தியானவன் சிறப்பை கூறுகிறார்.

11. ஹரிதச்வஃ ஸஹஸ்ரார்சி
ஸப்த ஸப்திர் மரீசிமான்
திமிரோந்மதனஃ ஶம்புஃ
த்வஷ்டா, மார்த்தாண்டஅம்ஶுமான்.

பதவுரை.

| | |
|---|---|
| ஹரிதச்வஃ | (நீ) பச்சை நிறமுள்ள குதிரையை யுடையவன் |
| ஸஹஸ்ரார்சிஃ | ஆயிரங்கிரணங்களை யுடையவன் |
| ஸப்தஸப்தி | ஸப்தா என்னும் குதிரையை யுடையவன் |
| மரீசிமாந் | அதிகப்ரகாசமான கிரணங்களை யுடையவன் |
| திமிரோன் மதநஃ | இருளைப் போக்குகின்றவன் |
| சம்புஃ | யாவருக்கும் சுகமளிப்பவன் |
| த்வஷ்டா | எல்லாவற்றையும் அழிப்பவன் |
| மார்த்தாண்டஃ | பிரளயத்தில்அழிந்த உலகங்களை [புந: பிழைப்பிக்கின்றவன் |
| அம்சுமான் | எங்கும்விளங்கும் கிரணங்களையுடையவன் |

தாத்பரியம்— பச்சைநிறமுடைய குதிரையை யுடையவனும், மனோஹரமானவாஹனத்தை யுடையவனும், அனேக கிரணங்களையுடையவனும், கல்யாண குணங்களையுடையவனும், "ஸப்த" என்னும் குதிரையை யுடையவனும், ப்ரசஸ்தமான கிரணங்களையுடையவனும், சங்கசக்ராதி ஆயுதங்களை உடையவனும், இருளை போக்கடிப்பவனும், ஞானத்தை உண்டாக்குபவனும் ஸுகத்தை விளைவிக்குமவனும், எல்லாவற்றையும் அழிப்பவனும், ப்ரளயத்தை அடைந்த

ப்ரம்மாண்டத்தை மறுபடியும் உண்டாக்குமவனும், சிறந்த கிரணங்களை யுடையவனும், ப்ரபஞ்சத்தில் உள்ளும்வெளியும் வ்யாபித்திருப்பவனும் நீதான். 11

அவதாரிகை— கீழேசொன்ன விஷயத்தையே உபபாதிக்கிறார்.

**12.** ஹிரண்யகர்ப்பஃ ஶிஶிரஃ தபநோபாஸ்கரோரவிஃ
அக்னிகர்போதிதேஃபுத்ரஃஶங்கஶ்ஶிஶிரநாஶன

பதவுரை.

| | |
|---|---|
| (த்வம்) ஹிரண்யகர்ப்ப: நீ | பொன்மயமான ப்ரஹ்மாண்டத்தில் விளங்குமவன் |
| சிசிரஃ | தாபங்களைத்தீர்ப்பவன் |
| தபனஃ | தபிக்கச்செய்பவன் |
| பாஸ்கரஃ | ப்ரகாசத்தை உண்டாக்குமவன் |
| ரவிஃ | யாவராலும் ஸ்துதிக்கப்படுவேன் |
| அக்கினிகர்ப்பஃ | அக்கினியை கர்ப்பத்தில் உடையவன் |
| அதிதே:புத்ரஃ | அதிதியின் குமாரன் |
| சங்கஃ | ஆநந்த ஸ்வரூபி |
| சிசிரநாசனஃ | பனியை போக்கடிப்பவன் |

தாத்பர்யம்— ஸவர்ணமயமான ப்ரம்மாண்டத்தில்ப்ரகாசிப்பவனும், ரமணீயமான ஹ்ருதயத்தை யுடையவனும், ஸகலஜீவன்களையும் தன் கர்ப்பத்தில் வைத்திருப்பவனும், ஆத்யாத்மிக ஆதிதைவிக ஆதி பௌதிக மென்கிற தாபத்ரயங்களையும் தீர்ப்பவனும், பக்தர்களின்விரோதிகளை தபிக்கச்செய்பவனும், எல்லா வஸ்துக்களும் தெரிவதற்கு காரணபூதமாய் ஒளியை

உண்டாக்குமவனும், வேதங்களை ப்ரம்மாவுக்கு உப தேசித்தவனும், காலாக்னியான ருத்திரனை வயிற்றிலு டையவனும், அதிதிக்கு மகனும், ஆனந்தஸ்ரூபியும். பனியைபோக்கடிப்பவனும் நீயே. 12

13. வ்யோமனாதஃ ஸ்தமோ பேதீ
ருக்யஜுஸ்ஸாமபாரகஃ
கனவ்ருஷ்டிஃ அபாம் மித்ரோ
விந்த்யவீதீ ப்லவங்கமஃ.

பதவுரை.

| | |
|---|---|
| வ்யோமனாத | நீ ஆகாசத்துக்கு அரசன் |
| தமோபேதீ | இருளைப்போக்கடிப்பவன் |
| ருக்யஜுஸ்ஸாமபாரகஃ | ருக்கு யசுர் ஸாமவேதங்களின் கரையை யடைந்தவன் |
| கனவ்ருஷ்டிஃ | பெருமழையை பெய்பவன் |
| அபாம் மித்ரஃ | ஜலத்துக்கு ஸ்நேகிதன் |
| விந்தயவீதீ | விந்தியமலையின் வழியாக |
| ப்ரபலங்கமஃ | சீக்கிரமாக செல்பவன் |

தாத்பர்யம்—நீ ஆகாசத்துக்கிறைவன்; இருளை போக்குமவன் ராஹுவை பேதிப்பவன், ருக், யஜுஸ் ஸாமவேதங்களைக்கொண்டு அறியப்படுபவன், அதிக மான மழை பெழிபவன், நீருக்கு நண்பன். விந்திய பர்வதத்தின் மார்க்கத்தில் அதாவது ஆகாயமார்க்கத் தில் சீக்கிரமாகபோகுமவன். 13

4. ஆதபீ மண்டலீ ம்ருத்யுஃ பிங்களஸ்ஸர்வ தாபனஃ
கவிர்விஸ்வோமஹாதேஜா ரக்த ஸ்ஸர்வபவோத்பவஃ

பதவுரை

| | |
|---|---|
| ஆதபீ | (நீ) வெய்யிலுடையான் |
| மண்டலீ | வளைந்த உருவுடையவன் |
| ம்ருத்யுஃ | பகைவரைக் கொல்பவன் |
| பிங்களஃ | கோரோஜனத்தின் நிற முடையவன் |
| ஸர்வதாபனஃ | யாவற்றையும் தபிக்கச் செய் பவன் |
| கவிஃ | பண்டிதன் |
| விஸ்வ | யாவற்றையும் நிர்வஹிபவன் |
| மஹாதேஜாஃ | மிகுந்ததேஜஸ்ஸையுடையவன் |
| ரக்தஃ | பக்தர்களிடத்து அன்புள்ளவன் |
| ஸர்வபவோத்பவ | எல்லாகாரியங்களுக்கும் காரண மானவன் |

நீ வெய்யிலை யுடையவன், வட்டமான உருவை யுடையவன், சத்துருக்களை ஜெயிப்பவன், உதிக் கும்போது கோரோஜனத்தின் நிறமுடையவன் (மத்தி யான்னத்தில்) எல்லாவற்றையும் தபிக்கும்படி செய்ப வன், வ்யாகரணமுதலான ஸகல ஸாஸ்த்ரங்களையும் ப்ர விர்த்திக்கும்படியாகச்செய்பவன், சகலத்தையும் நிர் வஹிப்பவன், விசேஷமான காந்தியை உடையவன், பக்தர்களிடத்தில் விசேஷமான் ப்ரியமுடையவன், ஸமஸ்த கார்யங்களுக்கும் காரணமானவன். 14

15. நக்ஷத்ர க்ரஹதாராணும் அதிபோ விஶ்வபாவனஃ.
தேஜஸாமபி தேஜஸ்வீ த்வாதஶாத்மந் நமோஸ்துதே

## பதவுரை

| | |
|---|---|
| நக்ஷத்ர-க்ரஹ-தாராணாம் | (நீ) அச்விந்யாதி நக்ஷத்திரம் கிரஹம் ஸாதாரணநக்ஷத்திரமிவைகட்கு |
| அதிப: | நாதன் |
| விஸ்வபாவன: | உலகத்தை நிலைநிறுத்துமவன். |
| தேஜஸாமபி | ஒளிகளைகாட்டிலும் |
| தேஜஸ்வீ | ஒளியுள்ளவன் |
| த்வாதஸாத்மன் | பன்னிரெண்டுமூர்த்திகளையுடையோனே |
| தே | (அப்படிப்பட்ட) உனக்கு |
| நம: அஸ்து | நமஸ்காரம் உண்டாகுக |

தாத்பர்யம்—அச்விந்யாதி நக்ஷத்திரங்களுக்கும் க்ரஹங்களுக்கும் ஸாதாரண நக்ஷத்திரங்களுக்கும் நாதனானவனும், தேஜஸுக்களுக்குள் மிகுந்த தேஜஸ்ஸை உடையவனுமாய் பன்னிரு உருவை உடையவனே உன்பொருட்டு நமஸ்காரம். 15

**16.** நம: பூர்வாய கிரயே பஸ்சிமே கிரயே நம:
ஜ்யோதிர்கணாநாம் பதயே திநாதி பதயே நம:

## பதவுரை.

| | |
|---|---|
| பூர்வாய | கீழ்திசையிலுள்ள |
| கிரயே | மலையிலிருக்கிற |
| நம: | உன்பொருட்டு நமஸ்காரம் |

| | |
|---|---|
| பஸ்சிமே | மேற்குதிக்கிலுள்ள |
| கிரயே | மலையிலிருக்கும் |
| நம: | உன் பொருட்டு நமஸ்காரம் |
| ஜ்யோதிர்கணானாம் | ஒளியுள்ளவையின் கூட்டத்தின் |
| பதயே | இறைவனாகிய |
| (தே) நம: | உன் பொருட்டு நமஸ்காரம் |

தாத்பர்யம்:—கிழக்கு மலைமேலுள்ள உனக்கு நமஸ்காரம், மேற்குமலையிலுள்ள உனக்கு நமஸ்காரம் கிழக்கு, மேற்கு மலைகளுக்கு அந்தர்யாமியான உனக்கு நமஸ்காரம், ஜ்யோதிர்கணங்களுக்கு நாதனான உனக்கு நமஸ்காரம், முக்தர்களுக்கு ப்ராப்ய ஸ்தானமான உனக்கு நமஸ்காரம், பகலிரவுகளையுண்டாக்கும் உனக்கு நமஸ்காரம் (ஸூர்ய மண்டலாந்தர்யாமியான உனக்கு நமஸ்காரம்). 16

17. ஜயாய ஜயபத்ராய ஹர்யச்வாய நமோ நம:
நமோ நம:ஸஹஸ்ராம்சோ ஆதித்யாய நமோ நம:.

பதவுரை.

| | |
|---|---|
| ஜயாய | ஜெயிப்பவனான |
| நம: | உன் பொருட்டு நமஸ்காரம் |
| ஜயபத்ராய | ஜயத்தையும் மங்களத்தையும் கொடுக்க வல்ல |
| (தே) நம: | உன் பொருட்டு நமஸ்காரம் |

| | |
|---|---|
| ஹர்யஸ்வாய | பச்சைக்குதிரையுடைய |
| நம: | உன் பொருட்டு நமஸ்காரம் |
| ஸஹஸ்ராம்சோ | ஆயிரம்கிரணங்களை யுடைய |
| நம: | உனக்கு நமஸ்காரம் |
| ஆதித்யாயதே | சூரியனாகிய (உன்பொருட்டு) |
| நம: நம: | நமஸ்காரம் நமஸ்காரம் |

தாத்பர்யம்:—நிகரில்லாத ப்ராக்ரமத்தைஉடைய உனக்கு நமஸ்காரம் செய்கிறேன், (பக்தர்களுக்கு ஸம்ஸார ஜயத்தை உண்டாக்குகிற உனக்கு நமஸ்காரம்), ஜயத்தையும் மங்களத்தையும் உண்டாக்குகிற உனக்கு வந்தனத்தை செய்கிறேன், பச்சைவர்ணமானகுதிரையையுடைய ஸூர்யனுக்கு அந்தர்யாமியான உனக்கு நமஸ்காரம் செய்கிறேன், (மனோஹரமான கருட வ்ருஷபாதி வாஹனங்களை யுடைய உன்னை நமஸ்கரிக்கிறேன்) ஆயிரம் கிரணங்களையுடைய ஸூரியனுக்கு அந்தர்யாமியானவனே (அபரிமிதமான தேஜஸ்ஸைஉடையவனே உன் அம்சமான ஸகல ஜீவன்களுக்கும் ஆதாரமானவனே) உன்னை வணங்குகிறேன், யோகிகளால் ஸூரிய மண்டலத்தில் காணப்படுமவனை உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். 17

**18.** நம: உக்ராய வீராய ஸாரங்காய நமோநம:
நம: பத்மப்ரபோதாய மார்த்தாண்டாயநமோ நம:.

பதவுரை.

| | |
|---|---|
| உக்ராய | பயங்கரமான ரூபத்தை யுடைய |
| (தே) நம: | உன் பொருட்டு நமஸ்காரம் |

| | |
|---|---|
| வீராய | ப்ராணிகளைபல விதமாகஏவுகிற (உன்பொருட்டு) |
| நம: | நமஸ்காரம் |
| ஸாரங்காய | விரைவாகச்செல்லும் உனக்கு |
| நம: நம: | நமஸ்காரம் நமஸ்காரம் |
| பத்மப்ரபோதாய | தாமரையை விகஸிக்கும்படி செய்யக்கூடிய உன்பொருட்டு |
| நம: | நமஸகாரம் |
| மார்த்தாண்டாய (தே) | ப்ரமாண்டம் அழிந்தபோது பிறந்தவனுனஉன் பொருட்டு |
| நம: நம: | நமஸ்காரம் நமஸ்காரம் |

தாத்பர்யம்— உபாஸியாதார்க்கு பயங்கரமாக யிருக்கும் உனக்கு நமஸ்காரம், ஸகல ப்ராணிகளேயும் அவைகளின் பூர்வகர்மங்களுக்கு அநுகுணமாக அவ ரவர்கள் கர்மங்களில் ஏவுகிற உனக்குநமஸ்காரம், சீக்ர மாக நடக்கக்கூடியவனும் (ஸாரத்தை க்ரஹிப்பவனும், ப்ரணவத்திற்கு ப்ரதிபாத்தியனும், ஹம்ஸரூபத்தை ப்ரிக்ரஹித்தவனுமான உனக்கு நமஸ்காரம், தாமரை யை அலரும்படியாகச் செய்பவனுன (பக்தர்களின் ஹ்ருதயக மலத்தை விகஸிக்கும்படியாகச் செய்பவ னுன)உனக்கு நமஸ்காரம், ப்ரம்மாண்டம் ப்ரளயத்தை அடைந்தபோது மறுபடியும் ஸ்ருஷ்டிப்பதற்காக் இருப்பவனுன உனக்கு நமஸ்காரம். 18

19. ப்ரஹ்மேஸா நாச்யுதேஸாய
ஸூர்யா யாதித்ய வர்ச்சஸே
பாஸ்வதே ஸர்வ பக்ஷாய
ரௌத்ராய வபுஷே நம:.

பதவுரை.

| | |
|---|---|
| ப்ரம்ஹேஸாச்யுதேஸாய | ப்ரம்மதேவனுக்கும், சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் நியாமகனான |
| (தே) நம: | (உனக்கு) நமஸ்காரம் |
| ஸூர்யாய | ப்ராணிகள் கர்மங்களை செய்யும்படி தூண்டுபவனான |
| (தே) நம: | உனக்கு நமஸ்காரம் |
| ஆதித்யவர்சஸே | ஸூர்யரூபமாகிய ஒளியையுடைய |
| (தே) நம: | உனக்கு நமஸ்காரம் |
| பாஸ்வதே | தேஜஸ்ஸையுடைய |
| (தே) நம: | உனக்கு நமஸ்காரம் |
| ஸர்வபக்ஷாய | அனைவற்றையும் புஜிப்பவனான |
| (தே) நம: | உனக்கு நமஸ்காரம் |
| ரௌத்ராய | பயங்கரமான |
| வபுஷே | சரீரமுடைய |
| (தே) நம: | உனக்கு நமஸ்காரம் |

தாத்பர்யம்:— ப்ரம்ம விஷ்ணு ருத்திரர்களுக்கு நியாமகனாய் பரப்ரம்ம ரூபமான உனக்கு நமஸ்காரம், ஸகலப்ராணிகளையும் அந்தந்த கர்மங்களை செய்யும்படி ப்ரேரேபிக்கிறவரான உனக்கு நமஸ்காரம், ஸூரியமண்டலத்தில் தேஜோரூபமான உனக்கு நமஸ்காரம், ஸமஸ்த தேஜஸ்ஸுகளுக்கும் காரணமான மஹாதேஜஸ்ஸையுடைய உனக்கு நமஸ்காரம், ப்ரளயகாலத்தில் ஸகலத்தையும் ஸம்ஹரிப்பவனான உனக்கு நமஸ்காரம், அப்பொழுது பயங்கரமான உருவத்தை உடைய உனக்கு நமஸகாரம், நமஸ்காரம். 19

**20.** தமோக்னய ஹிமக்னய
ஶத்துருக்னயா மிதாத்மனே
க்ருதக்னக்னய தேவாய
ஜ்யோதிஷாம் பதயே நமஃ.

பதவுரை.

| | |
|---|---|
| தமோக்னய | இருளையகற்றுபவனும் |
| ஹிமக்னய | பனியையொழிப்பவனும் |
| ஶத்ருக்னய | பகைவரை அழிப்பவனும் |
| அமிதாத்மனே | ப்ரிச்சின்னமில்லாத ஸ்வரூபமுடையவனும் |
| க்ருதக்னக்னய | செய்நன்றி யறியாதவனை கொல்லு மவனும் |
| தேவாய | ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரத்தால் விளையாடுமவனும் |
| ஜ்யோதிஷாம்பதயே | ஒளியுடையவருக்கு நாதனாகிய |
| (தே) நமஃ | உன்பொருட்டு நமஸ்காரம் |

தாத்பர்யம்--இருளைப்போக்கடிப்பவனான (அஞ்ஞானத்தை போக்குமவனான) உனக்கு நமஸ்க்காரம், பக்தர்களுக்கு சீதோஷ்ணாதி த்வந்த்வங்களை ஸஹிக்கும்படியான ஸாமர்த்யத்தை அளிப்பவரான உன்பொருட்டு நமஸ்காரம், ஆச்ரிதர்களின் பகைவரை ஹிம்ஸிப்பவரான (சத்ருக்களான இந்த்ரியங்களை ஜயிக்கும் சக்தியைபக்தர்களுக்கு அருளக்கூடிய) உமக்கு நமஸ்காரம். தேச கால வஸ்து க்ருத த்ரிவித ப்ரிச்சேதய சூன்யரான (அளவற்றமஹிமையையுடைய) உமக்கு நமஸ்காரம், ஸகல பாபிகளையும், செய்தநன்றி மறப்பவர்களையும் சிக்ஷிப்பவனான உன்பொருட்டு நமஸ்காரம். ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரத்தால் விளையாடி ஆனந்

திப்பவரான (ஸ்வயம் ப்ரகாசவானான) உனக்கு நமஸ்காரம், சந்த்ர சூர்யாதி ஸகல ஒளிகளுக்கும் ப்ரகாசத்தை கொடுப்பதால் நாதனான உனக்கு நமஸ்காரம். 20

21. தப்தசாமிகராபாய வஹ்னயே விஶ்வகர்மணே
நமஸ்தமோபி நிக்னாய ருசயேலோகாசாக்ஷிணே.

பதவுரை.

| | |
|---|---|
| தப்தசாமீகராபாய | உருக்கினபொன்னுக்கு நிகரானவனும் |
| வஹ்னயே | அக்கினிஸ்வரூபனாகியவனும் |
| விச்வகர்மணே | உலகத்தைச்செய்பவனாகியவனும் |
| தமோபிநிக்னாய | பேரிருளையழிப்பவனும் |
| ருசயே | காந்தியால் திகழ்பவனாகியவனும் |
| லோகஸாக்ஷிணே | உலகத்துக்கு ஸாக்ஷிபூதனுமாகிய |
| (தே) நமः | பொருட்டு நமஸ்காரம் |

தாத்பர்யம்:—உயர்ந்த தங்கம்போன்ற நிறத்தையுடையவனான உனக்கு நமஸ்காரம், அக்கினிபோன்ற ரூபத்தையுடைய (ஸகலபோகங்களுக்கும் ஆதாரமான) உனக்கு நமஸ்காரம், இருளைப்போக்கடிப்பவனான உனக்கு நமஸ்காரம், எல்லாவற்றிலும் ப்ரகாசிப்பவனான (ஸ்வயம்ப்ரகாசரூபத்தை உடையவனான) உனக்கு நமஸ்காரம். உலகத்தார் செய்யும் ஸகலகர்மங்களுக்கும் ஸாக்ஷியான உனக்கு நமஸகாரம். 21

---

22. நாஶயத்யேஷவை பூதம் ததேவஸ்ருஜதி ப்ரபுः
பாயத்யேஷ தபத்யேஷ வர்ஷத்யேஷ கபஸ்திபிः.

பதவுரை.

| | |
|---|---|
| ப்ரபுः | அனைத்தையும் ஆளுபவனான |
| ஏஷவை | இம்மஹாபுருஷனே |

| | |
|---|---|
| பூதம் | உலகத்தை |
| நாமயதி | நாசம்செய்கிறான் |
| ததேவ | அவ்வுலகத்தையே |
| ஸ்ருஜதி | ஸ்ருஷ்டிக்கிறான் |
| ஏஷஃ | இவனே |
| கபஸ்திபிஃ | கிரணங்களால் |
| பாயதி | உலர்த்திவிடுகிறான் |
| தபதி | தபிக்கும்படிசெய்கிறான் |
| வர்ஷதி | வர்ஷிக்கிறான் |

தாத்பர்யம்:—ஸகலலோகத்துக்கும்நியாமகனை இந்த ஸ்வாமியே ஸமஸ்த ப்ரபஞ்சத்தையும் ப்ரளய காலத்தில் ஸம்ஹரிப்பார். மறுபடியும் அப்பிரபஞ்சத்தையே ஸ்ருஷ்டிப்பார். இவரே கிரணங்களால் தாபத்தை உண்டாக்கி,உலர்த்திவிடுவார், மழைபெய்யும்படிச் செய்வார். 22

23. ஏஷஸுப்தேஷு ஜாகர்தி
பூதேஷு பரிநிஷ்டிதஃ
ஏஷஏவாக்னி ஹோத்ரஞ்ச
பலம் சைவாக்கினி ஹோத்திரிணும்.

பதவுரை.

| | |
|---|---|
| ஏஷஃ | இவன் |
| பூதேஷு | பிராணிகள் |
| ஸுப்தேஷு | தூங்குகையில் |
| பரிநிஷ்டிதஃ | எங்கும் பரந்தவனாக |
| ஜாகர்தி | விழித்திருப்பான் |
| ஏஷஏவ | இவனே |
| அக்கினிஹோத்ரஞ்ச | அக்கினிகாரியத்தையும் |
| அக்கினிஹோத்திரணும் | அத்தனிகாரியம்செய்பவருக்கு |
| பலம்சைவ | பலமும் (ஆகிறான்) |

தாத்பர்யம்:— ப்ராணிகள் உறங்கும்போது இவன் அப்பிராணிகள் எல்லாவற்றிலும் அந்தர்யாமியாகவியாபித்து விழித்துக்கொண்டிருப்பான், அக்கினிஹோத்திரங்களையும், அக்கினிஹோத்திரங்களுடைய பலமும் இம்மஹாபுருஷனே. 23

**24.** வேதாஶ்ச க்ரதவச்சைவ க்ரதூனும் பலமேவச
யானி க்ருத்யானி லோகேஷுஸர்வஏஷரவிஃப்ரபுஃ.

பதவுரை.

| | |
|---|---|
| **வேதாச** | **(இவன்) வேதமும்** |
| க்ரதவச்ச | யாகமும் |
| க்ரதூனும் | யாகத்தினுடைய |
| பலமேவச | பலமும் (ஆகிறான்) |
| லோகேஷு | உலகங்களில் |
| க்ருத்யானி | காரியங்கள் |
| யானி (ஸந்தி) | எவை இருக்கின்றனவோ |
| (தேஷாம்) | அவைகளுக்கு |
| ஸர்வஃ | ஸமஸ்தாத்மாவான |
| ஏஷஃ ரவிஃ | இந்த சூரிய மண்டல வர்த்தியான புருஷன் |
| ப்ரபுஃ | நியாமகன் |

தாத்பர்யம்:—இவனே வேதங்கள் இவனேயாகங்கள். யஞ்யத்தால் அடையக்கூடிய பதார்த்தமும் இவனே, மேலும், உலகத்தில் எந்தெந்த கர்மங்கள் செய்யப்படுகின்றனவோ அவைகள் எல்லாவற்றிற்கும் ஸர்வாத்மாவாகிறான் ஸூர்ய மண்டலமத்தியவர்த்தியான இந்த புருஷனே நியாமகனும், பலத்தை அளிப்பவனுமாகிறான். 24

**25.** ஏன மாபத்ஸு க்ருச்ரேஷு
காந்தாரேஷு பயேஷுச
கீர்த்தயந் புருஷகஶ்சித்
நாவஸீததி ராகவ.

### பதவுரை.

| | |
|---|---|
| ராகவ | ராமா |
| புருஷஃ | புருஷன் |
| கஶ்சித் | ஒரொருவன் |
| ஆபத்ஸு | ஆபத்திலும் |
| க்ருச்ரேஷு | கஷ்டத்திலும் |
| பயேஷு | பயங்களிலும் |
| ஏனம் | இவ்வாதித்யஹ்ருதயத்தை |
| கீர்த்தயன் | ஸ்துதித்தானாகில் |
| நாவஸீததி | துக்கிக்கமாட்டான் |

தாத்பர்யம்:—ஹேராமா! இதை அனுஷ்டி[illegible]தில் வர்ணம், ஆச்ரமம் முதலான பேதங்கள்[illegible]யாது, யாராகயிருந்தபோதிலும் ஆபத்துண்டானபோதாவது, கஷ்டம் வந்தபோதாவது, காட்டில் சஞ்சரிக்கும் போதாவது அல்லது இதரபயங்களுண்டானபோதாவது இந்த ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்திரத்தை அநுசந்தித்தால் அவன் துன்பத்தினின்றும் நீங்கி பயமற்று ஸுகத்தை அடைவான். 25

**26.** பூஜஸ்த்வேந மேகாக்ரோ
தேவதேவம் ஜகத்பதிம்
ஏதத் திரிகுணிதம் ஜப்த்வா
யுத்தேஷு விஜயிஷ்யஸி.

பதவுரை.

| | |
|---|---|
| ஏகாக்ரஃ | (நீ) ஒரே விஷயத்தில் செலுத்தப் பட்ட மனமுடையவனாய் |
| தேவதேவம் | தேவதேவனும் |
| ஜகத்பதிம் | உலகநாதனுமான |
| ஏனம் | இந்ததேவனை |
| பூஜயஸ்வ | பூஜைசெய் |
| ஏதத் | இந்த ஆதித்ய ஹ்ருதயத்தை |
| திரிகுணிதம் | மூன்றுதரம் |
| ஜப்த்வா | ஜபித்து |
| யுத்தேஷு | யுத்தத்தில் |
| விஜயிஷ்யஸி | வெல்லுவாய் |

தாத்பர்யம்:—நீ மனஸ்ஸை த்ருடமாக நிறுத்தி, தேவர்களுக்கு தேவனும் ஜகன்னாதனுமான இந்த பகவானை இந்த ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்திரத்தால் பூஜைபண்ணு, இதை மூன்றுதரம் ஜபிததால் யுத்தத்தில் ஜயமுண்டாகும். 26

27, அஸ்மின் க்ஷணே மஹாபாஹோ
ராவணம் த்வம் வதிஷ்யஸி
ஏவ முக்த்வா ததா கஸ்த்யோ
ஜகாமச யதாகதம்.

பதவுரை.

| | |
|---|---|
| மஹாபாஹோ | பெருபுஜமுடையனே |
| த்வம் | நீ |
| அஸ்மின்க்ஷணே | இந்த க்ஷணேநிமிஷத்தில் |
| ராவணம் | இராவணனை |
| வதிஷ்யஸி | கொல்லுவாய் |

| | |
|---|---|
| ததா | அப்போது |
| அகஸ்த்யஃ | அகஸ்த்யர் |
| ஏவம் | இப்படி |
| உக்த்வா | சொல்லி |
| யதாகதம் | வந்தபடி |
| ஜகாம | சென்றார் |

தாத்பர்யம்:—பெருமையை உடைய புஜங்களை யுடைய ரகுகுலதிலகா! நீ இந்த ஸ்தோத்திரத்தை ஜபம் செய், இந்த க்ஷணத்திலேயே ராவணனை வதம் செய்வாய் என்று அகஸதியர் சொல்லிவிட்டு தன் ஸ்தானம்போய் சேர்ந்தார். 27

28. ஏதச்ருத்வா மஹாதேஜா
நஷ்டஶோகோ பவத்ததா
தாரயாமாஸ ஸுப்ரீதோ
ராகவஃ ப்ரயதாத்மவான்.

பதவுரை.

| | |
|---|---|
| ததா | அப்பொழுது |
| மஹாதேஜாஃ | மிகுந்த தேஜஸ்ஸுடைய |
| ராகவஃ | ராமன் |
| ஏதத் | இதை |
| ஶ்ருத்வா | கேட்டு |
| நஷ்ட ஶோகஃ | ஒழிந்த துயரமுடையவராக |
| அபவத் | ஆயினர் |
| ஸுப்ரீதஃ | விசேஷ ஆனந்தத்தை அடைந்தவராய் |
| ப்ரயதாத்மவான் | பரிசுத்தமான மனமுடையவராக |
| தாரயாமாஸ | தரித்தனர் |

தாத்பர்யம்:—அப்பொழுது மஹா தேஜஸ்ஸை உடைய ராமன் இம்மஹா ஸ்தோத்திரத்தை கேட்ட மாத்திரத்தில் மனதில் சிந்தையைவிட்டு, பரமசந்தோஷத்துடனும் பரிசுத்தமான மனதுடனும ஆதித்யஹ்ருதய தோத்திரத்திற்கு ப்ரதிபாத்தியனை தேவதேவனை த்யானம் செய்தார். 28

29. ஆதித்யம் ப்ரேக்ஷ்ய ஜப்த்வாது
பரம் ஹர்ஷ மவாப்தவான்
த்ரிராசம்ய ஶுசிர்பூத்வா
தனுராதாய வீர்யவான்.

பதவுரை.

| | |
|---|---|
| வீர்யவான் | விசேஷ பராக்கிரமமுடைய ஸ்ரீராமன் |
| ஆசம்ய | ஆசமனஞ்செய்து |
| ஶுசி: | ப்ரிசுத்தராக |
| பூத்வா | ஆகி |
| ஆதித்யம் | சூரியனை |
| ப்ரேக்ஷ்யா | பார்த்து |
| த்ரி: ஜப்த்வாது | மூன்றுதரம் ஜபித்து |
| தனு: | வில்லை |
| ஆதாய | எடுத்துக்கொண்டு |
| பரம் | மிகுந்த |
| ஹர்ஷம் | களிப்பை |
| அவாப்தவான் | அடைந்தார் |

தாத்பர்யம்:—ராமன் ஆசமனம் செய்து சுத்தியாக ஸூர்யனை பார்த்துக்கொண்டு (ஆதித்ய மண்டலாந்தர்வர்த்தியான பரமாத்மாவை த்யானம் செய்து கொண்டு) மூன்றுதரம் ஆதித்யஹ்ருதய ஸ்தோத்ர

த்தை ஜபித்து நிகரற்ற பராக்ரமத்தை உடையவராய் பரமானந்தமடைந்து வில்லை கையில் ஏந்தினர். 29

30. ராவணம் ப்ரேக்ஷ்ய ஹ்ருஷ்டாத்மா
யுத்தாய ஸமுபாகமத்
ஸர்வயத்னேன மஹதா
வதே தஸ்ய த்ருதோ பவத்.

பதவுரை.

| | |
|---|---|
| (ஸ:) | (அந்த ராமன்) |
| ராவணம் | இராவணனை |
| ப்ரேக்ஷ்ய | பார்த்து |
| ஹ்ருஷ்டாத்மா | களிப்புற்றமனமுடையவராய் |
| யுத்தாய | சண்டையின்பொருட்டு |
| ஸமுபாகமத் | ஸமீபித்தார் |
| மஹதா | பெரியதான |
| ஸர்வயத்னேன | ஸமஸ்தப்ரயத்தினத்தாலும் |
| தஸ்ய | அவ்விராவணனுடைய |
| வதே | கொலையில் |
| த்ருத: | நிச்சயித்தவராக |
| அபவத் | ஆனர். |

தாத்பர்யம்—ராமபிரான் அப்பொழுது ராவணனைப்பார்த்து ஸந்தோஷத்துடன், எல்லாவிதத்தாலும் அவனை கொல்லுவதாகநிச்சயித்து போர்புரிவதற்காக அருகில் சென்றார், 30

31. அத ரவிரவதந்நிரீக்ஷ்ய ராமம்
முதிதமநா: பரமம் ப்ரஹ்ருஷ்யமாண:
நிஶிசரபதி ஸங்க்ஷயம் விதித்வா
ஸுரகணமத்யகதோ வசஸ்த்வரேதி.

## பதவுரை.

| | |
|---|---|
| அத | பிறகு |
| ரவி: | சூரியன் |
| முதிதமனா: | களிப்புற்ற மனமுடையவனாக |
| பரமம் | மிகவும் |
| ப்ரஹ்ருஷ்யமாண: | சந்தோஷத்தால்மயிர் கூச்சலுமுடைவனாய் |
| ஸுரகணமத்யகத: | தேவகண மத்தியை யுடைந்து |
| ராமம் | ஸ்ரீராகவனை |
| நிரீக்ஷ்ய | பார்த்து |
| நிசிசரபதி ஸங்க்ஷயம் | ராக்ஷஸர்களுக்கு அதிபதியின் நாசத்தை |
| விதித்வா | தெரிந்துகொண்டு |
| த்வர | துரிதப்படும் |
| இதி | என்று |
| வச: | வார்த்தையை சொல்லினர். |

தாத்பர்யம்:—அப்பொழுது, ஸூரிய மண்டலாந்தர்வர்த்தியாய் ஹிரண்மயனான அம்மாஹா புருஷன் தன்னை தேவர்களின் கூட்டங்கள் சுற்றிக்கொள்ள பரம ஸந்தோஷத்துடன் மயிர் கூச்சலுண்டாக ராமனுக்குத்தோன்றி ராமனைப்பார்த்து "ராக்ஷஸர்களுக்கு அதிபதியான ராவணன் விநாசத்தை அடைவானென்று அறிந்துக்கொள். துரிதமாய் எழு" என்று சொன்னார். 31

ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்ரம்

சம்பூர்ணம்.

# ஸ்ரீராமாயண மகாத்மியம்.

ஸ்ரீராமாயண மகாத்மியத்தைச் சொல்லியருள வேண்டுமென்று பார்வதி பரமசிவனைப் பிரார்த்திக்கச் சொல்லுகின்றார்.

சதகோடி விஸ்தாரமுள்ள இராமாயணம் பிரம்ம லோகத்திலே நித்தியமும் மார்க்கண்டேயர் சொல்ல பிரமதேவனால் கேட்கப் படுகின்றது,

ஆகையால், தேவர்கள் தானவர்கள் கந்தர்வர்கள் முனிவர்கள் மனிதர்கள் நாகர்கள் ஆகிய இவர்களால் வான்மீகரால் செய்யப்பட்ட ஸ்ரீ ராமாயணம் சர்வ முயற்சி செய்து கேட்கத் தகுந்தது.

பாத்மம் ஆக்கினேயம் வராகம் முதலியபுராணக் கூட்டங்கள் யாவும், ஸ்ரீராமாயணத்திலுள்ள ஒரு சுலோக்கத்தின் பதினாறில் ஒருபங்குக்கும் நிகரல்ல.

தேவீ ! ஸ்ரீராமாயண ஸ்லோகங்களைப் பூலோகத்தில் யார் எழுதுகிறார்களோ அவர்களெல்லாரும் பரமாத்மாவினிடத்தில் என்னுடன் வசிப்பார்கள்.

இமாசலகுமாரீ! சமஸ்தலோகங்களிலுள்ள பக்தர்களெல்லாரும் மகாபாதகங்களை நாசஞ்செய்கின்ற புண்ணிய சரித்திரமா[illegible] அந்த ராமாயணத்தைக் கேட்கின்றார்கள்.

என்றும், மற்றும் ஸ்ரீமத்ராமாயணத்தைக் கிழக்கு முகமாக இருந்து பிரசங்கம் செய்யவேண்டுமென்றும் வடக்குமுகமாக இருந்து சிரவணம் செய்யவேண்டுமென்றும், போசனத்துக்குமுன் பூஜனம் செய்தால்

காமியபலன் யாவும் சித்திக்குமென்றும், போசனானந் தரம் படனம் செய்யின் மோக்ஷம் சித்திக்குமென்றும் படனபலனும் சிரவணபலனும் அதிக விஸ்தாரமாகவும், கந்தப்புராணம் அகத்திய சம்மிதையிலுள்ள பார்வதி பரமேஸ்வர பிரஸ்னோத்தரமாகிய இருநூறு சுலோகங்களுள்ள 106-வது அத்தியாயம் புகலாநின்றது.

ஒவ்வொரு புராணத்தின் படனபலனும் சிரவணபலனும் அதிலதிலேயே கூறப்பட்டிருக்கும். ஸ்ரீராமாயணத்தின் படனபலமும் சிரவணபலனும் ஸ்ரீராமாயணத்திலேயே கூறப்பட்டிருப்பதுமன்றிக் காந்தம் பிரமாண்டம் நாரதீய முதலிய பல புராணங்களுள் கூறப்பட்டிருத்தலால் புராணங்கள் யாவற்றுள்ளும் ஸ்ரீமத்ராமாயணம் சிறப்புடைத் தென்றறியற்பாலது.